# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### <u>சிகிரியா கோட்டை வளாகத்தில் RO நீர் நிலையம் அங்குரார்ப்பணம்</u>

UNESCO உலக பாரம்பரிய தளமான சிகிரியா கோட்டை வளாகத்தில் RO நீர் நிலையம் ஒன்று 2024 ஆகஸ்ட் 21ஆம் திகதியன்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம், மத்திய மாகாண பிரதி பிரதம செயலாளர்; மத்திய மாகாணத்தின் வணிக, வர்த்தக மற்றும் சுற்றுலாத் திணைக்களத்தின் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள் உட்பட பலர் இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டனர்.

2. குறித்த RO நீர் ஆலையானது புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழான மத்திய கலாசார நிதியத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அடுத்த ஐந்தாண்டுகாலப் பகுதியில் குறித்த ஆலையை பராமரிப்பதற்கான செலவையும் இந்திய அரசு ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளது.

3. உலகம் முழுவதிலுமிருந்து சிகிரியாவிற்கு வரும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு குறித்த RO நீர் ஆலை பயன்தரும். இந்த உதவியானது. இலங்கையின் வளர்ச்சி மற்றும் சகல துறைகளிலுமான முன்னேற்றத்திற்கான இந்தியாவின் தற்போதைய அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

*****

**கொழும்பு**
**22 ஆகஸ்ட் 2024**